**நாள்: 02.04.2026**
**O.S. No. 45/2022**

**பி.சா.2**
**பெயர்: சரவணன், த/பெ. பாலசுப்ரமணியன்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் பாகம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து யாருக்கு உரிமையான சொத்து என்றால் பிரதிவாதி மகேந்திரனின் தகப்பனார் மாரியப்பனுக்கு சொந்தமான சொத்தாகும். தாவா சொத்தை மாரியப்பன் எப்போது கிரயம் பெற்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நானும் மகேந்திரனும் பள்ளி தோழர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பான ஆவணங்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமை மூல ஆவணங்களை நான் பார்த்தில்லை என்பதால் அதன் உரிமையாளர்கள் மற்றும் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பாக வீதம் பற்றி தெரியும்.

மாரியப்பன் வாரிசுகள் விபரம் தெரியுமா என்றால் தெரியும். மகன்கள் வீரமணி, சேகர் மற்றும் மகேந்திரன். மகள்கள் ரேனுகா மற்றும் தனம். மேற்படி மாரியப்பன் வாரிசுகள் எப்போது வரை ஒன்றாக குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றால் எனக்கு தெரிந்து 2005-06 வரை ஒன்றாக தான் இருந்தார்கள். மாரியப்பனுக்கு மேற்படி மகன் மகள்களை தவிற வேறு வாரிசுகள் உள்ளார்களா என்றால் மாரியப்பனுக்கு இரண்டு தாரம். நான் முதலில் சொல்லிய 3 மகன்கள் 2 மகள் 2ம் தாரம் வள்ளியம்மைக்கு பிறந்தவர்கள். மூத்த தராத்து பெயர் தெரியாது. மூத்த தாராத்து பிள்ளைகள் விபரம் தெரியாது.

பிரதிவாதி குடும்பத்தில் எப்போது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் 2014 லில் ஏற்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் பத்திரபதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் மாரியப்பனின் வாரிசுகள் அனைவரும் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் கையெழுத்திட்டுள்ளார்கள். வள்ளியம்மை பாகபிரிவினை பத்திரத்தில் கையெழுத்து செய்துள்ளாரா என்றால் இல்லை. அவர் 2002 ல் இறந்துவிட்டார். பதிவு பாகபத்திரத்தின் ஆவணஎண் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

நான் கூறுவது போல மாரியப்பன் குடும்பத்தில் பாகபிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது வள்ளியம்மைக்கு சொந்தமான சொத்தினை மாரியப்பன் பிரதிவாதி மகேந்திரனுக்கு எழுதிகொடுத்ததால் தான் இந்த வழக்கு என்றால் சரிதான். பிரதிவாதி எனது பள்ளி தோழர் என்பதால் அவர் கேட்டுகொண்டதற்காக வழக்கு விபரம் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.04.02 18:03:16 +0530